


Metro லீடர்
# மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 05 இதழ்: 288 15.02.2025 பக்கங்கள்:09 editorml21@gmail.com விலை:75/-



## தேசிய மக்கள் சக்தி அரசின்
# கன்னி பட்ஜெட்
### திங்களன்று ஜனாதிபதி அனுரவினால் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

## ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய மாவட்டத் தலைவர்கள் நியமனம்



2025 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய மாவட்டத் தலைவர்களுக்கான நியமணக் கடிதங்கள் வழங்கி 02



பிரான்ஸ் நாட்டினை தலைமையகமாகக் கொண்டு செயற்படுகின்ற அகதிகள் மற்றும் குடியுரிமை அற்றோருக்கான பாதுகாப்பு அலுவலக பிரதிநிதிகளுக்கும், அகில இலங்கையில் மக்கள் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் இடம் பெற்றது.

## முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தை மாற்றுவோம்
## அமைச்சர் சரோஜா ஐ.நா. சபையிடம் உறுதி



02

## மின் தடைக்கு குரங்கை காரணம் காட்டுவது பொருத்தமில்லை - சஜித் பிரேமதாச



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின் தடைக்கு குரங்குதான் காரணம் என்று கூறுவது பொருத்தமில்லாத ஒரு கருத்தாகும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 02

## அம்பாறை மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் - அக்ஷ்ரப் தாஹிர் பா.உ

(எம்.எப்.றிபாஸ், பாறுக் ஷிஹான்)



அம்பாறை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் மக்கள் எதிர்நோக்கும் கல்வி, பொருளாதாரம், விவசாயம், மீன்பிடி, விளையாட்டு, சமூக சேவை மற்றும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் முன்மொழிவுகளைச் செய்து, இவ்வாறான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் வேண்டுகோள் 02

## தேசிய மக்கள் சக்தி.....

இந்த வருடத்திற்கான வரவு செலவு அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை (17) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன்படி, நிதியமைச்சர் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

பின்னர் பட்ஜெட் விவாதம் பெப்ரவரி 18 முதல் மார்ச் 21, 2025 வரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையிலும் இரண்டாம் வாசிப்பு வாக்கெடுப்பு 25ஆம் திகதி மாலை 06.00 மணிக்கும் நடைபெறும்.

பின்னர், நிதி ஒதுக்கீடு மசோதா 2025 மீதான குழு விவாதம் பிப்ரவரி 27 முதல் மார்ச் 21 வரை 4 சனிக்கிழமைகள் உட்பட 19 நாட்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறும்

## ஐக்கிய மக்கள் சக்தியின்....

வைக்கும் நிகழ்வு நேற்று (14) பாராளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச இந்நியமணக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இதன் பிரகாரம், மாத்தளை மாவட்டத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ரோஹினி குமாரி விஜயரத்ன கவிரத்ன, அநுராதபுர மாவட்டத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார, புத்தளம் மாவட்டத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, காலி மாவட்டத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க, கம்பஹா மாவட்டத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, குருநாகல் மாவட்டத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, களுத்தறை மாவட்டத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா, திருகோணமலை மாவட்டத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஏனைய மாவட்டங்களுக்கான அடுத்த தொகுதி நியமனங்கள் கிட்டிய நாட்களில் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார பிரசன்னமாகி இருந்தார்.

## மின் தடைக்கு....

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்படும் திடீர் மின் தடைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும்.எமது நாட்டில் தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டில் இருந்து வெளியேறுவதாகவும் இதற்கு மின் தடையே பிரதான காரணமாக இருப்பதாகவும் தெரிவித்தார் . இதற்கு உரிய அமைச்சர் எடுத்திருக்கும் தீர்வுதான் என்ன எனவும் இதன்போது கேள்வியெழுப்பினார். எனவே, இந்த மின் தடைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது .

# சடுதியாக அதிகரித்துள்ள மலையக மரக்கறிகளின் விலை

தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்திற்கு கிடைத்த மலையக மரக்கறிகளின் மொத்த விலை இன்று உயர் பெறுமதியை எட்டியிருந்தது.

அதன்படி, ஒரு கிலோ கரட்டின் மொத்த விலை 1,000 ரூபாவாக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தாழ்நில மரக்கறிகளின் விலையில் சில குறைப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தக்காளி, தேசிக்காய் ஆகியவற்றின் மொத்த விலை 80 ரூபாய் வரை இருந்ததாக கூறப்படுகிறது.



மேலும், ஒரு கிலோ பாகற்காயின் மொத்த விற்பனை விலை 450 முதல் 500 ரூபா வரையிலும், கத்தரிக்காய் ஒரு கிலோ 350 முதல் 400 ரூபா வரையிலும், ஒரு கிலோ வெண்டைக்காய் 250 முதல் 300 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

## முஸ்லிம் விவாக விவாகரத்து....

ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கு எதிரான பாகுபாடு ஒழிப்புக் குழு நேற்று தனது ஒன்பதாவது அறிக்கை தொடர்பான பரிசீலனையை நிறைவு செய்துள்ளது.

குறித்த அமைப்பின் பிரதிநிகளுக்கும் இலங்கையின் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் அடங்கிய தூதுக்குழுவும் இது தொடர்பில் நேற்றைய தினம் கலந்துரையாடியுள்ளது.

அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த நாட்டின் தேசிய செயல் திட்டத்தைப் இந்த குழு பாராட்டியதோடு குழந்தை திருமணம் மற்றும் உள்ளக வன்முறை அனுமதிக்கப்பட்ட முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் குறித்து சரோஜா போல்ராஜ் அடங்கிய குழுவிடம் குறித்த அமைப்பு கேள்வியெழுப்பியது.

முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் 2022 இல் திருத்தப்பட்டது, ஆனால் சட்டத்தின் கூறுகள் குறித்து இன்னும் குறைகள் உள்ளன. குழந்தை திருமணத்தை தடை செய்வது உட்பட சட்டத்தை மேலும் திருத்த திட்டங்கள் இருந்ததா? என்றும் இலங்கைக்கான குறித்த குழுவின் அறிக்கையாளர் “யமிலா கொன்சாலஸ் பெரர்” கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்கும் இலங்கை அரசு உறுதி பூண்டுள்ளதாகக் கூறினார். 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களுக்குப் பிறகு, சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்த அமைப்புடன் நாட்டின் முதல் ஈடுபாடு இதுவாகும் என்பதால், இந்த மதிப்பாய்வு குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது.

முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் குறித்து, அதன் திருத்தம் குறித்தும் அரசாங்கம் ஆலோசனைகளை நடத்தியுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் கலாச்சார உரிமைகளுக்கு இடையில் சமநிலையை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை நிர்ணயிப்பதற்கும், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பல துறைகளைக் கொண்ட குழுவை நிறுவுவதற்கும் மகளிர் பாராளுமன்றக் குழு பரிந்துரைத்ததாக சரோஜா போல்ராஜ் மேலும் கூறினார்.

குடும்ப வன்முறை குறித்து, குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் திருத்தப்பட்டுள்ளதாகவும் திருத்தப்பட்ட சட்டம் இந்த ஆண்டு அமுலுக்கு வரும் என்றும் கூறியுள்ள அமைச்சரின் குழு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிச் சட்டம், பாதிக்கப்பட்டவர்கள் மரியாதையுடனும் தனியுரிமையுடனும் நடத்தப்படுவதற்கும், சட்ட, மருத்துவ மற்றும் உளவியல் உதவியைக் கோருவதற்கும் உள்ள உரிமைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் நடைபெறும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடுகள் தொடர்பில் முறைப்பாடு செய்ய இலவச தொலைபேசி இலக்கம் அமுலில் உள்ளது என்றும் தெரிவித்தார்.

அத்தோடு குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் குழுவுக்கும் இலங்கையின் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் குழுவுக்கும் இடையில் பெண்கள் தொடர்பான பல் பிரிவு பேச்சுவாத்தைகள் இடம்பெற்றுள்ளன.

## அம்பாறை மாவட்ட மக்களின்...

வேண்டுகோள் விடுத்தார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரமவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் மேலும் பல கோரிக்கைகளை முன் வைத்தார்.

நிந்தவூர் பிரதேச கலாசார மண்டப நிர்மாணம், வீதி அபிவிருத்தி, பாடாசாலை அபிவிருத்தி, பாலம் அமைத்தல் போன்றவையும், சாய்ந்தமருது பிரதேச மையவாடி, மீனவர்களின் பிரச்சினைகள், மாவடிப்பள்ளி பாடசாலை அபிவிருத்தி, விவசாயிகளின் பிரச்சனைகள், சம்மாந்துறை பேருந்து தரிப்பிடத்தை மீண்டும் செயற்படுத்தல், அட்டாளைச்சேனை வீதிகள், வடிகான்கள் அமைத்தல், நாவிதன்வெளி மையவாடி, பொது விளையாட்டு மைதான புனர்நிர்மாணம், போன்ற பல முன்மொழிவுகள் பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிரினால் முன்மொழியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், ஆணையாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

## மாணவர்களிடையே பரவும் சுவாச நோய்கள்

நாட்டின் பல பாகங்களில் வளி மாசு அதிகரித்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இதனால் சிறுவர்களிடையே சுகாதார பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

விஷேடமாக மூச்சுத்திணறல், இருமல், ஆஸ்துமா மற்றும் சுவாச நோய் சார்ந்த வைரஸ் பரவலும் அதிகரித்துள்ளது.

சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் போன்றவர்களுக்கும் இக் காலப்பகுதியில் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம். மேலும் நாட்பட்ட சுவாச நோயாளர்கள், ஆஸ்துமா நோயாளர்கள், நோயிலிருந்து பாதுகாப்பு பெற முகக்கவசங்களை அணிவது சிறந்தது.

தொடர்ச்சியாக இருமல் மற்றும் மூச்சுத்திணறல் காணப்படுமாயின் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெறுவது நல்லது.

தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்ற வேளை பாடசாலை செல்லும் மாணவர்களிடையே சுவாச நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு வைரஸ் வகைகளைச் சேர்ந்த சுவாச நோய்கள் இவ்வாறு பரவக்கூடும் என லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் சுவாச நோய்கள் தொடர்பான விஷேட வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் மாணவர்களின் உடல் நிலை குறித்து சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் எனவும், சுவாச நோய்களில் இருந்து பாதுகாப்பு பெற உரிய சுகாதார நடைமுறைகளை பின்பன்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

editorml21@gmail.com

# ட்ரம்ப் - மோடி பரஸ்பர சந்திப்பு

## இருதரப்பு உறவு மற்ற நாடுகளைப் பாதிக்க கூடாது

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை, இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று (14) அதிகாலை சந்தித்துப் பேசினார். அப்போது பாதுகாப்பு, வர்த்தகம் தொடர்பாக இரு தலைவர்களும் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர்.

பிரான்ஸ் சுற்றுப் பயணத்தை நிறைவு செய்த பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு சென்றார். தலைநகர் வொஷிங்டனில் உள்ள விமானப் படை தளத்தில் தரையிறங்கிய அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதிகாலை நேரத்தில் கடும் குளிரை பொருட்படுத்தாமல் இந்திய வம்சாவளியினர் திரண்டு வந்து அவரை உற்சாகமாக வரவேற்றனர்.

அங்கிருந்து அமெரிக்க ஜனாதிபதி மாளிகையில் உள்ள விருந்தினர் இல்லமான பிளேர் ஹவுஸ்க்கு பிரதமர் மோடி சென்றார். உலகின் முக்கிய தலைவர்கள் மட்டுமே பிளேர் ஹவுஸில் தங்க வைக்கப்படுகின்றனர்.



ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசி இருவரும் பரஸ்பரம் கைகுலுக்கி, சுமார் 45 நிமிடங்கள் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர். குறிப்பாக பாதுகாப்பு, வர்த்தகம் தொடர்பாக முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.




இந்த நிலையில், இரண்டு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவு மற்ற நாடுகளை பாதிக்க கூடாது என சீனா கருத்து தெரிவித்துள்ளது.

இது குறித்து சீனாவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் கூறுகையில்,

ஆசிய-பசுபிக் பிராந்தியம் புவிசார் அரசியல் போட்டிக்கான களம் அல்ல என்றும், மாறாக அமைதியான வளர்ச்சிக்கான மையம் என்றும் தெரிவித்தார். மேலும் இரண்டு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளும், ஒத்துழைப்பும் சீனாவிற்கோ அல்லது பிற நாடுகளின் நலன்களுக்கோ பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்று குறிப்பிட்ட அவர், இருதரப்பு உறவு என்பது அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று சீனா நம்புவதாகின்றது . என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாப்பரசர் பிரான்சிஸ் மருத்துவமனையில் அனுமதி

போப் பிரான்சிஸ் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வாடிகன் நகரம் தெரிவித்துள்ளது.



ஐரோப்பாவிலுள்ள தன்னாட்சிப் பெற்ற நாடான வாடிகன் நகரத்தின் தலைவரும் கத்தோலிக்க சபையின் திருத்தந்தையுமான பிரான்சிஸ் (வயது 88) கடந்த சில நாள்களாக சுவாசக்கோளாறு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

மேலும், அவரது உரைகளை படிப்பதற்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று (14) அவர் இத்தாலி தலைநகர் ரோமிலுள்ள கெமிளி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தேவையான மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு சுவாசக்குழாய் அழற்சி (ப்ரொன்சிடிஸ்) நோயிக்கான சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக வாடிகன் நகரம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக மூட்டு மற்றும் இடுப்பு வலி, பெருங்குடல் வீக்கம் உள்ளிட்ட பல்வேறு உடல் உபாதைகளினால் பாதிக்கப்பட்டிருந்த போப் பிரான்சிஸுக்கு, ஹெர்னியா அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தென் கொரியாவில் தீ விபத்து: 6 பேர் உயிரிழப்பு



தென் கொரியாவில் கட்டுமானத் தளத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். தென் கொரியாவின் புசான் நகரில் உள்ள ரிசார்ட் கட்டுமானத் தளத்தில் நேற்று ஏற்பட்ட தீவிபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளதோடு 25 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு உடனடியாக வருகை தந்த நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் தீயணைப்புப் பணிகளில் ஈடுபடத்தப்பட்டனர்.

குறித்த கட்டுமானத் தளத்திலிருந்து சுமார் 100 தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். மேலும் கட்டடத்தின் உச்சியில் இருந்து 14 பேர் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டனர்.

EAST லீடர்

# விசேட அதிரடிப் படையினரினால் கேரளக் கஞ்சாவுடன் பிரபல வியாபாரிகள் இருவர் கைது

தில்சாத் பர்வீஸ்



கேரளக் கஞ்சாவுடன் கல்முனையில் பிரபல ஆடை வியாபாரி ஒருவரையும், கல்முனையில் கடிகாரம் திருத்து வேலை செய்யும் ஒருவரையும் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர். அத்தோடு கேரளக் கஞ்சாவையும் விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் நேற்று (04) செவ்வாய்க்கிழமை இரவு வேளையில் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் குறித்த சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, கல்முனைக்குடி 14 பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும், மருதமுனை பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய சந்தேக நபரொருவருமே கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 12 கிலோகிராம் 230 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேக நபர்கள் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது, கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலைக்கு 20 ஆயிரம் தண்டப் பணம் விதிப்பு

பாறுக் ஷிஹான்



சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க தவறிய தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள சிற்றுண்டி சாலைக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குட்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள சிற்றுண்டி சாலை சுகாதார முறையில் காணப்படவில்லை என சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றதையடுத்து சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையிலான குழுவினரினால் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இதன் போது சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க தவறிய குறித்த சிற்றுண்டிசாலை உரிமையாளருக்கு எதிராக சுகாதார வைத்திய அதிகாரிகளினால் வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டு சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தியவேளை ரூபா 20 ஆயிரம் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையையும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டம் ஆரம்பம்

எம்.பஹத் ஜுனைட்

அரசாங்கத்தினால் 2025 இல் ஆரம்பிக்கப்பட்ட "அழகான நாடு புன்னகைக்கும் மக்கள்" க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் காத்தான்குடி பாத்திமா பாலிக்கா வித்தியாலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் எம்.எம்.யூனூஸ் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்வில் முதற்கட்டமாக



காலைக் கூட்டத்தில் க்ளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டம் சம்மந்தமாக மாணவர்களுக்கு விபரிக்கப்பட்டதுடன், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான சத்தியப் பிரமாண நிகழ்வும் இடம் பெற்றது.

## தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் முபஸ்ஸிரின் செயற்கை நுண்ணறிவில் கலாநிதிப் பட்டம் பெற்றார்

நூருல் ஹுதா உமர்

GRIFFITH UNIVERSITY
QUEENSLAND AUSTRALIA



இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் கணணி துறை விரிவுரையாளர் எம்.எம். எம்.முபஸ்ஸிரின் தனது கலாநிதிப் பட்டப்படிப்பை அவுஸ்திரேலியாவின் கிரிபித் பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞானத்தின் "செயற்கை நுண்ணறிவுத் துறையில் நிறைவு செய்துள்ளார். இந்த பட்டத்தை பெற உலக வங்கியின் அனுசரணையில் உயர் கல்வி அமைச்சினால் வளங்கப்பட்ட AHEAD திட்டம் மற்றும் கிரிபித் பல்கலைக்கழகம் போன்றவற்றின் உயர் புலமைப்பரிசில்களை பெற்றிருந்தார் என்பது முக்கியாமான விடயமாகும்.

மருதமுனை எ.எல். எம். முசம்மில், என்.எம். பௌசியா தம்பதியினரின் மூன்றாவது பிள்ளையான இவர் கல்முனை கல்வி வலய மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் கணணி துறையில் விஷேட இளமானி பட்டத்தை பூர்த்தி செய்த முபஸ்ஸிரின், அங்கு போதனா ஆசிரியராக நியமனம் பெற்று சேவையாற்றி பின்னர் 2016 ஆம் ஆண்டில் நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அதே துறையில் விஞ்ஞான முதுமானிக் கற்கையினை பேராதெனிய பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தார். இலங்கை சப்ரகமுவ பல்கலைக் கழகத்திலும் ஒரு வருடமளவில் விரிவுரையாளராக பணி புரிந்தமை குறிப்பிடதக்கதாகும்.

சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் பல்வேறுபட்ட ஆராய்ச்சி மாநாடுகளில் பங்கேற்றத்துடன் உலகின் தலை சிறந்த சஞ்சிகைகளில் பல்வேறுபட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினதும் தனது பீடத்தினதும் உயர்வுக்கு முக்கிய பங்காற்றி வருகிறார்.

# புனித ரமழான் காலத்தில் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான கலந்துரையாடல்

நூருல் ஹுதா உமர்



புனித ரமழான் காலத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கல்முனை, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் விசேட உணவு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர். எஸ்.எப்.இசட்.சஹாரா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிராந்திய தொழில் சார் நலன் மற்றும் உணவுப் பாதுகாப்பு வைத்திய அதிகாரி டொக்டர். முஹம்மட் பௌசாட், சாய்ந்தமருது மற்றும் கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஜே. மதன், கல்முனை தெற்கு, கல்முனை வடக்கு மற்றும் சாய்ந்தமருது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் முதலானோர் கலந்து கொண்டனர்.

இதன் போது நோன்பு காலத்தில் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும் உடனடி உணவுகள், கடைகளில் விற்பனை செய்யப்படும் கஞ்சி வகைகள் போன்றவற்றை பரிசோதனை செய்வதுடன் இவ் உணவக உரிமையாளர் களுக்கு வழிகாட்டுதல் நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

விசேடமாக நோன்பு காலங்களில் சிற்றுணவு வகைகளை விற்பனை செய்ய விரும்பும் வியாபாரிகள் தாங்கள் இவ்வாறு விற்பனையில் ஈடுபட இருப்பதாக உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இவ் வழிகாட்டல் வழங்கப்பட்ட பின்னர் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் உணவு பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய நிலையில் உணவுகளை சமைத்து விற்பனை செய்யும் உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

கே.ஏ.ஹமீட்



அட்டாளைச்சேனை 11 ஆம் பிரிவு புதிய தபாலக வீதியைச் சேர்ந்த முகம்மது சஹீது ஜெனீஸ் தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாக கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.எம். எம்.ரியால் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்

அட்டாளைச்சேனை ஹவுஸ் ஒப் இங்கிலில் நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றும் இவர் அகமட்லெப்பை சித்தி நசீறா ஆகியோரின் அன்பு புதல்வருமாவார்.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கற்றுக் கொண்ட இவர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமானி பட்டத்தினையும், தொழில்சார் உளவளத்துணை பட்டத்தினையும் பூர்த்தி செய்துள்ளார்.

# புத்தளம் மாவட்ட சிங்கள மொழி மூத்த ஊடகவியலாளர் விமலசேன நம்முனி காலமானார்

எம்.எச்.எம் சியாஜ்



புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் விமலசேன நம்முனி 81 வது வயதில் காலமானார்.

1991 ஆம் ஆண்டு எத்த என்ற சகோதர மொழி பத்திரிகையுடன் தனது ஊடக பயணத்தை ஆரம்பித்த விமலசேன அதன் பின்னர் திவயின, லக்பிம, லங்காதீப மற்றும் தினமின ஆகிய சிங்க மொழி பத்திரிகைகளின் மஹாவெவ பிராந்திய நிருபராகப் பணியாற்றினார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

# சமுர்த்தி சமூக வலுவூட்டல் தொடர்பாக தெழிவூட்டல்




எம்.ஜி.ஏ. நாஸர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி சமூக வலுவூட்டல் தொடர்பாக மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களை தெழிவூட்டும் கலந்துரையாடல் அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான க.பிரபு, வைத்தியர் இ.சிறிநாத், எம்.எஸ்.நழீம், சமுர்த்தி திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் அமிர்தகலாதேவி பாக்கியராஜா, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் சு.ராஜ்பாபு, பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி திணைக்கள பிரதேச முகாமையாளர்கள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

சமுர்த்தி சமூக வலுவூட்டல் தேசிய திட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து வருடங்கள் படுத்தப்படுவதுடன் இத்திட்டத்தின் ஊடாக வறுமையை ஒழிப்பதற்கு பிரதச மட்டத்தில் சுயதொழில் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் போது சமூக வலுவூட்டலை நடைமுறைப்படுத்த வேண்டிய முறைமை பற்றியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டன



மனித அபிவிருத்தி தாபனம், நிந்தவூர் பிரதேச செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பான நடமாடும் சேவை நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.ஏ.லத்திப் தலைமையில் நடைபெற்றது

# பாலமுனை அஷ்ரப் வித்தியாலயத்தில் சைக்கிள் ஓட்ட போட்டி

எம்.பஹத் ஜுனைட்

மட்டக்களப்பு பாலமுனை அஷ்ரப் வித்தியாலயத்தின் முப்பதாவது ஆண்டினை பூர்த்தி செய்யும் முகமாகவும் பாடசாலையில் 2025 ஆம் ஆண்டுக்குரிய இல்ல விளையாட்டுப் போட்டியின் ஒரு நிகழ்வாக சைக்கிள் ஓட்டப் போட்டி புதன் கிழமை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எம்.ஏ.எம். பரீது தலைமையில் இடம்பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டி பலமுனை பிரதான வீதியூடாக சென்று ஆரையம்பதி ஊடாக மட்டக்களப்பு வரை சென்று மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

இப் போட்டியில் டயமன்ட், கோல்ட்,பேர்ள் இல்ல மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கேற்று இருந்துடன் பாடசாலையின் அபிவிருத்தி குழு, பழைய மாணவர்கள் சங்க உறுப்பினர்கள், பொலீஸ் உத்தியோகத்தர்கள், ஊர் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்

sportsml77@gmail.com

# SPORTS லீடர்

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இலங்கை அணி அபார வெற்றி

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 174 என்ற ஓட்டங்களால் இமாலய வெற்றியை பதிவு செய்து தொடரை கைப்பற்றியுள்ளது.




கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இந்த போட்டி நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அதன்படி, போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை




அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் குசல் மெந்திஸ் 101 ஓட்டங்களையும், சரித் அசலங்க ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

அதேபோல், நிஷான் மதுஷ்க 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். அதன்படி, 282 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 24.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பில் அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித் அதிகபட்சமாக 29 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் வனிந்து ஹசரங்க மற்றும் அசித பெர்ணான்டோ ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் துனித் வெல்லாலகே 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அதன்படி, இரண்டு போட்டிகளை கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் வெள்ளையடிப்பு செய்து இலங்கை அணி தொடரை கைப்பற்றியுள்ளது

## பரிசுத் தொகையை அறிவித்த ஐ.சி.சி

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சாம்பியன்ஸ் கிண்ண 2025 தொடருக்கான பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டு இருக்கிறது. மார்ச் 9 ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு 2.24 மில்லியன் டொலர்கள் இந்திய மதிப்பில் ரூ. 19.45 கோடி வழங்கப்படும் என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது.



இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கான பரிசுத் தொகை 1.12 மில்லியன் டொலர்கள், இந்திய மதிப்பில் ரூ. 9.72 கோடி வழங்கப்படுகிறது. அரையிறுதி சுற்றில் தோல்வியை தழுவும் ஒவ்வொரு அணிக்கும் 5.6 லட்சம் அமெரிக்க டொலர்கள், இந்திய மதிப்பில் ரூ. 4.86 கோடி வழங்கப்படுகிறது.



# கட்டார் ஓபன் டென்னிஸ்

## அரையிறுதிக்கு தெரிவான ஸ்வியாடெக்

கட்டார் ஓபன் டென்னிஸ் தொடர் கட்டாரின் டோஹாவில் உள்ள கலீ·. பாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் தரவரிசையில் 2ஆம் இடம் பிடித்தவரும், போலந்து வீராங்கனையுமான இகா ஸ்வியாடெக், கசகஸ்தான் வீராங்கனை எலினா ரிபாகினா உடன் மோதினார்.

இதில் அதிரடியாக ஆடிய ஸ்வியாடெக் 6-2, 7-5 என எளிதில் வென்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் வீரர்களுக்கு ஐசிசி அபராதம்



ஒருநாள் போட்டியில் விதிகளை மீறியதற்காக 3 பாகிஸ்தான் வீரர்களுக்கு ஐசிசி அபராதம் விதித்துள்ளது.

பாகிஸ்தான், நியூசிலாந்து, தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான முத்தரப்பு ஒருநாள் தொடர் பெப்ரவரி 8ஆம் திகதி தொடங்கியது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 352/5 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அதிகபட்சமாக கிளாசன் 87, பவுமா 82, ப்ரிட்ஸ்கி 83 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய பாகிஸ்தான் அணி 49 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்தப் போட்டியில் தென்னாப்பிரிக்கா துடுப்பெடுத்தாடும் போது 28ஆவது ஓவரில் ஷாகின் ஷா அப்ரிடி வேண்டுமென்றே மேத்திவ் பிரிட்ஜ்கி ஓடும்போது இடைமறித்தார்.

பின்னர், இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதனால் அவருக்கு 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

அடுத்ததாக 29ஆவது ஓவரில் டெம்பா பவுமா விக்கெட்டினை அவருக்கு அருகில் நெருக்கமாகச் சென்று கொண்டாடியதற்காக ஷகில், குலாம் ஆகிய இருவருக்கும் தலா போட்டி ஊதியத்திலிருந்து 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.